விலைரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU

(19[illegible] — வெள்ளி விழா ஆண்டு — 1983)

மலர் 25 புரட்டாதி 23 முஹறம் 2 இதழ் 238

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 9 10 83


## 'இலங்கையை ஆக்கிரமிக்க தமிழககட்சி திட்டமிட்டது!'

### ஐ. நா. செயலாளரிடம் ஹமீட் கண்டனம்

நியூயோர்க், அக். 8

தமிழ்நாட்டில் உள்ள அரசியல்கட்சி ஒன்று வள்ளங்களைப் பயன்படுத்தி இலங்கையை ஆக்கிரமிக்கத் திட்டமிட்டிருந்தது.

இவ்வாறு இலங்கை வெளிநாட்டமைச்சர் ஜனுப் ஏ. சி. எஸ். ஹமீட் ஐ. நா. பொதுச் செயலாளர் திரு. பெரஸ்டி கியூலரிடம் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் வந்த ஜனுப் ஹமீட் ஐ. நா. பொதுச் செயலாளரை நியூயோர்க்கில் வைத்து சந்தித்து இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற இனக்கல

(8ம் பக்கம் பார்க்க)

### 'நிலைமையை அவதானிக்கிறேன்!'
### — ஐ. நா. செயலாளர்

நியூயோர்க், அக், 8

இலங்கையின் நிலைமையைத் தாம் தொடர்ந்து அவதானித்து வருவதாக ஐ. நா.

(8-ம் பக்கம் பார்க்க)

### அமெரிக்க எம். பி.க்கள் கருத்துப்பற்றி 'அமிர்' தகவல்:

# 'இலங்கைத் தமிழர்பிரச்னையை இந்தியாவே தீர்க்கமுடியும்'

நியூயோர்க், அக். 8

இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு இந்தியாவினால் மட்டுமே தீர்வு காண முடியுமென்றும். வேறு எந்த வழியிலும் இதனைத் தீர்க்க முடியாது என்றும் அமெரிக்கப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இந்தத் தகவலை தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் வெளியிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு ஆதரவு தேடி ஐரோப்பிய நாடுகளில் இப்போது சுற்றுப்பயணம நடாத்திவரும் அமிர்தலிங்கம் நியூயோர்க்கில் யு. என். ஐ. நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் இதனைக் குறிப்பிட்டார்.

அமெரிக்கப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரையும் சந்தித்துப் பேசிய அமிர், இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக இந்தியப் பிரதமர் இந்திரா எடுக்கும் நடவடிக்கைகளையும் விபரமாக அவர்களுக்கு விளக்கினர். இதன் பின்னர் யு. என். ஐ. நிருபர்களுக்கு பேட்டி அளித்த போது, அமெரிக்க எம். பிக்களின் கருத்துக்களையும் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தினுல் தான் இலங்கைத்தமிழர் பிரச்னைக்கு முடிவான ஒருதீர்வைக் காண முடியும் என்று அவர்கள் நம்புகின்றனர். இந்த முறையிலேயே தமிழர் பிரச்னை தீர்க்

(8-ம் பக்கம் பார்க்க)

## கூட்டணி எம்.பிக்கள் சிலரை கைது செய்ய உத்தரவு?

சென்னை, அக். 8

இலங்கையில் உள்ள 27 தமிழ் தீவிரவாதிகளைக் கைது செய்வதற்கு அரசு விசேட உத்தரவு பிறப்பித்துள்ளது.

இத்தகவலை சென்னையிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த 27 தீவிரவாதிகளில் தமிழர்விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் அடங்குவர் என்றும் இந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## துப்பாக்கிச் சூட்டுக்கு பன்குளத்தில் பெண் பலி!

### நால்வர் ஆஸ்பத்திரியில்; வீடுதீக்கிரை!!

(திருகோணமலை)

திருகோணமலையிலுள்ள பன்குளம் குடியேற்றத் திட்டத்தில் சிங்களக் குடும்பமொன்றின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் நடுத்தர வயதுப் பெண் ஒருவர் உயிரிழந்தார். மற்றும் நால்வர் சூட்டுக் காயங்களுடன் திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அந்தக் குடும்பம் வசித்து வந்த வீடும் தீக்கிரையாக்கப்பட்டது,

பன்குளம் குடியேற்றத் திட்டத்தில நான்காம் வாய்க்காலில் நேற்று அதிகாலை 1-30 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்தது. துப்பாக்கிப் பிரயோகத்தினை அடுத்து வீட்டுக்குத் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது.

குறிப்பிட்ட வீட்டில் வசித்து வந்த நடுத்தர வயதுப் பெண்ணை ரி. வயலட் என்பவர் ஸ்தலத்திலேயே மாண்டார். இவரது கணவரான டபிள்யு. கே. வசின், மல்ராணி மாரசிங்க என்ற பெண், காமினி, சுகந்தா ஆகிய நால்வர் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இளைஞர் கோஷ்டியொன்று இந்தத் துப்பாக்கிப்பிரயோகத்தை நடாத்தியதாக உப்புவெளி பொலிஸார் நடாத்திய விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இது சம்பந்தமாக குட்டியன் தியாகு என்பவரை பொலிசார் கைது செய்துள்ளனர்,

## 3-வது கிரிக்கெட் டெஸ்ட் பாகிஸ்தான் 219—4

(நாக்பூர்)

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் நாக்பூரில் நடைபெறும் 3-வது கிரிக்கெட்

[8ம் பக்கம் பார்க்க]

## காரைக் கடத்தி நகைகள் கொள்ளை!

### துப்பாக்கி இளைஞர்கைவரிசை!!

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி - யாழ்ப்பாணம் வீதியில் சுவாமி தரிசனம் செய்வதற்கு வழியில் இறங்கிய நகைக்கடை முதலாளியையும் அவரது மகனையும் அவர்களது காருடன் கடத்திச் சென்ற இனம்தெரியாத இரு துப்பாக்கி இளைஞர்கள் அவர்கள் அணிந்திருந்த நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

சாவகச்சேரியைச் சேர்ந்த இராசதுரை பஞ்சாட்சரம் (வயது 47), அவரது மகன் தேவராஜா [வயது 18) ஆகியோரிடமிருந்தே நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

இச்சம்பவம் நேற்றுக் காலை இடம் பெற்றதென பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சாவகச்சேரியிலிருந்து காலை 7-30 மணியளவில் தமது காரில் ,மொறிஸ் ஒக்ஸ்போட் 7 ஸ்ரீ 8664) யாழ்ப்பாணம் கன்னுதிட்டியில் உள்ள தமது நகைக்கடைக்கு வந்து கொண்டிருந்த பஞ்சாட்சரமும் அவரது மகனும் அரியாலை செம்மணிப் பிள்ளையார் ஆலயத்தில் இறங்கி தரிசனம் செய்துவிட்டு மீண்டும் காரில் ஏறும் போது அங்கு நின்றுகொண்டிருந்த இளைஞர்கள் திடீரெ

[8-ம் பக்கம் பார்க்க]


## S-T-C-A (1966ல் நிறுவப்பட்டது)

### மகளிர் தொழிற்கல்வி நிலையங்கள்

கொழும்பு 6 — 10, 32-ம் ஒழுங்கை.

யாழ்ப்பாணம் — 37, சிவன்பண்ணை வீதி.

அளவெட்டி வடக்கு — புளியடி வளவு

PITMAN EXAMINATIONS INSTITUTE (LONDON)

எமது யாழ்ப்பாண நிலையத்தை 1-10-83 முதல் பரீட்சை நிலையமாக அங்கீகரித்துள்ளதால் லண்டன் பரீட்சைகள் இங்கு நடைபெறும். வெளிமாணவர்களும் அனுமதிக்கப்படுவார்கள்.

G. C. E. (O/L 83) ஆங்கிலம், தமிழ்/ஆங்கில சுருக்கெழுத்து, தட்டெழுத்து நெறிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. மிகவும் உபயோகமான ஆங்கில தட்டெழுத்து 6 வருட பரீட்சை வினுக்கள், விடைகள் அறிவுறுத்தல்கள் ரூபா 15/-

(9126)


### பேராதனைப் பல்கலைக்கழக

## 4-ம் வருட மருத்துவமாணவர் பரீட்சைக்கு செல்லார்!

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக் கழக மருத்துவபீட 4ம் வருட தமிழ் மாணவர்கள், இம்மாதம் 31ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் பரீட்சைகளுக்கு பேராதனை செல்வதில்லை என முடிவுசெய்துள்ளனர்.

நேற்று யாழ். நகரில் பேராதனைப் பல்கலைக் கழக மருத்துவபீட தமிழ் மாணவர்களின் கூட்டம் நடைபெற்றது.

இடம்பெயர்ந்த பல்கலைக் கழக மாணவர்களின் செயற்குழு மேற்கொண்டிருந்த தீர்மானத்தை ஆதரித்தே பேராதனை மருத்துவபீட மாணவர்களும்மேற்குறிப்பிட்டமுடிவை எடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராதனை மருத்துவபீட 4ம் வருட 90 மாணவர்களில் 49 பேர் தமிழ் மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(மா]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யப்பானில் மறுசீரமைக்கப்பட்ட 38 ஸ்ரீ 6000 தொடர்-ரொயட்டா ஹை ஏஸ் வான் இரண்டு சீற், றேடியோவுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: R. E. யோசேப், குமாரசுவாமி புலவர் றோட், சுண்ணாகம். 9175

10'' 12'' கிறைண்டர் 10 கோஸ் பவர் மோட்டர் எல்லாம் செற்றாக விற்பனைக்குண்டு. சு. வையாபுரி, உப்புமில், மயிலிட்டி. 9174

மாம்பழம் சந்திக்கு அருகில், நாவலர் வீதியும், கனகரத்தினம் வீதியும் சந்திக்கும் இடத்தில் மூன்று பரப்புக் காணியில், ஐந்து அறைகள், கிணறு, மின்சக்தி உடைய 2000 ச. அடி வீடு விற்பனைக்குண்டு. வர்த்தக நிலையமாகவும் உபயோகிக்கலாம். வங்கிக் கடன் பெறக்கூடிய உறுதியுண்டு. தரகர்கள் வேண்டாம் தொடர்பு: வேல்முருகு. 857, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 9129

வட்டுக்கோட்டை மேற்கில் மூளாய் றோட்டில் பிரதான வீதியில் நாலு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வீடு கட்ட வசதியான இடம். தொடர்பு கொள்ளவும். R. K. ரவீந்திரன், அதிகார்வளவு, ஆனைக்கோட்டை. 9106

EL MINOR 1000 கார் விற்பனைக்குண்டு. ஓவர் கெட் வால்வ், அ. குலநாயகம், இந்துக்கல்லூரிவீதி, உரும்பிராய். 9179

3ம் குறுக்குத் தெருவில் வெறுங்காணி சாட்டிமாதா கோவிலருகில் 9 பரப்புக் காணி, யாழ். நகரில் 40 வருடம் இயங்கிய பேக்கறி, Eastern சைக்கிள், எலெக்றிக் ஷேவிங்செற் (ஜேர்மன்) வீடு கட்டத் தேவையான பழைய மரங்கள் - தகரங்கள் என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. சற்குணநாதன் (சட்டத்தரணி), 2ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 9125

Toyota Corla K. E. 50 SL மொடல் கார் 11ஸ்ரீ 7 ஆயிரம் தொடர் இலக்கம் கொண்டது விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி டில்கா பேணிச்சர் பலஸ் இல; 234,236 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 24186 9162

பியர் அல்சேஷன் நாய்க்குட்டிகள் (ஆண் பெண்) விற்பனைக்குண்டு. கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். (புத்தூர் மிஷன் ஆஸ்பத்திரிக்கு முன்னால்) M. B. சந்திரா புத்தூர் கிழக்கு, புத்தூர். 9092

லண்டனில்இருந்துகொண்டு வரப்பட்ட வீட்டு தளபாடங்கள் குளிர்சாதனப்பெட்டி (Italy) Eloctrolux Freezer, Microwave Oven, Sharp Threeinone, Kenwood Gourmet, தெலிபோன் பதிவு இயந்திரம், Cordless Telephone, JVC HIFI Units, Leyland Redline Van (Disel) 12 Sri Lancer Station Wagon with A. C. மற்றும் பல வீட்டுக்குத் தேவையான மின்சார உபகரணங்கள் உண்டு. விபரங்களுக்கு 6, நல்லூர் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம். 9137

## விற்பனைக்கு

E. L. F. 250 நீள மொடல் தேக்கு மர(B)பொடி அடிக்கப்பட்டுள்ளது. புதிதாக இறக்குமதி செய்யப்பட்டது. விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி டில்கா பேணிச்சர் பலஸ் இல: 234,236 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24186 9163

இயக்கச்சிச் சந்தியிலிருந்து அரைமைல் தூரத்தில் முகாவில் உடுத்துறை வீதியில் பாப்பான்குளம் கிழக்கெல்லையாகக்கொண்ட 50ஏக்கர் வரையிலுள்ள காணி முழுமையாகவோ அல்லது இருபிரிவுகளாகவோ விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: நா, குமாரசுவாமி, யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம், யாழ்ப்பாணம். 9180

திக்கம் வாசிகசாலைக்கு அருகாமையில் வீடுகட்டுவதற்கும் தோட்டம் செய்வதற்கும் ஏற்ற மூன்றரைப்பரப்பு நிலம் (சந்திரமணியன் தோட்டம் விற்பனைக்குண்டு தொடர்பு- திருமதி R. சிவபாதம் C/o திருமதி சி. சிவபாதசுந்தரம், சிவனருள் பன்னையம்பதி, புலோலி கிழக்கு, பருத்தித்துறை. 9189

தரமான கழிவுசளற்றபாரை மீனும் பெற்று கொள்ளலாம். இதன்விலை (ஒரு றாத்தல் 500 கிராம் 22/-ரூபா மட்டும் யாழ். சைனீஸ் றெஸ்ரறோன்ற் 124, R. R. நல்லையா றோட், (முதலாம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். 9042

## பயிற்சி

வெளிநாடு செல்பவர்களுக்காக துரித மோட்டார் மெக்கானிஸம் - எலக்றிக்கல் வயறிங் - வெல்டிங் - பயிற்சிகள் 10-10-1983 ஆரம்பமாகின்றன. இன்ஸ்ரிரியூட் ஓவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 11B மொம்சாக்கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 9153

Radio and Electronic Engineering (Trade Course) காலை வகுப்புகள் கிழமை நாட்களில் ஆரம்பம் 10-10-83. முன்கூட்டியே பதிவுசெய்ய வேண்டும். உடன் தொடர்பு கொள்க: நிர்வாகி, பொறியியல் கல்வி நிலையம், 22, ராமையா செட்டியார் லேன், யாழ்ப்பாணம். 9108

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பைப்பெற ''ஒரு மாதகால வெல்டிங் பயிற்சி வகுப்புகள் (செய்முறை அறிமுறையுடன்) 10-10-83ல் ஆரம்பமாகின்றன. சர்வதேச புகழ்வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும். யாழ். நகரில் அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு தனியார் கல்லூரி. அதிபர் உயர்கலைக் கல்லூரி, 73, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 9183

## குத்தகைக்கு

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டைச் சந்தியில் எல்லாவித வசதிகளுடனும் ஸ்தாபிக்கப்பட்ட ஆங்கில வைத்தியசாலை குத்தகைக்கு கொடுக்கப்படும். எம். பி. பி. எஸ். வைத்திய கலாநிதிக்கு மிகவும் உகந்தது. உடன் தொடர்புகொள்ளவும். டாக்டர் ப. சண்முகநாதன், டிம்புல றோட், ஹற்றன். (92, Dimbulla Road, Hatton.) 9176

## தேவை

மணமகள் தேவை: 36 வயது றோமன்கத்தோலிக்க வேளாள குல வங்கி Sub-Manager (தரம்-3)ஆகத் தொழில் புரியும் மணமகனுக்கு 32-வயதுக் குட்பட்ட அதேகுலத்தைச் சேர்ந்த படித்தபெண் தேவை. கடிதமூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 9154 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9154

எஸ்-லோன் பைப் வியாபார நிலையமொன்றில் பைப்வகைகள் ஏற்றி இறக்க கூலித் தொழிலாளர்கள் உடன் தேவை. வயது 25க்கும் 35க்கும் இடைப்பட்டோர் கீழ்க் காணும் விலாசத்திற்கு நற்சாட்சிப்பத்திரங்களுடன் வரவும். அகதிகளுக்கு முதல் இடம் கொடுக்கப்படும். நியூற்ரோன் எலெக்ரிக்கல்ஸ், எஸ்-லோன் டெலிவரிப் பொயின்ற், 158 ஸ்டான்லி றோட், யாழ்ப்பாணம். 9177

கிளிநொச்சி நகரினுள் பிரதானவீதிக்கு அருகாமையில் இரண்டு ஏக்கர் காணி விலைக்குத்தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 9164 C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 9164

ஆலய நிர்வாக உதவியாளராக கடமையாற்ற ஆசார சீலமான தொண்டுமனப்பான்மையுள்ள குடும்பப்பொறுப்புகளற்ற ஒருவர் உடன்தேவை. தயவுசெய்து நற்சான்றிதழ்களுடன் கடித மூலம்தொடர்பு கொள்ளவும். காரியதரிசி, அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம், கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். 9124

அப்பளம் உற்பத்தி செய்வதில் அனுபவமுள்ள ஆண்கள் தேவை. சான்றிதழ்களுடன் நேரில் தொடர்புகொள்ளவும். சம்பளம் நேரில் பேசலாம். ஐங்கரன் ஸ்ரோர்ஸ் புகையிரத நிலையவீதி, கிளிநொச்சி. 9140

சீர்மைக்கிளுவைக்கதியால் (கிளிறிசீடியா) உடன் நடுகைக்குரியதாக ஆயிரம்-1000தோல் முதிர்ந்த கதியால்கள் தேவை. குறைந்த நீளம் 7½அடி, அடிக் கதியால் 4¼'' அங்குலம், நுனி 3'' அங்குல சுற்றளவுள்ள நெளிவற்ற கதியால்களாயிருத்தல் வேண்டும், மொத்தபெறுமதி; கிடைக்குமிடம் மற்றும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும், விளம்பர இல :9127 C/o ஈழநாடுலிமிட். யாழ்ப்பாணம், 9127

கல் உடைக்கும் கிறசர் மேற்பார்வையாளர் தேவை. அனுபவமுள்ளவர் நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும். சம்பளம் நேரில் பேசிக்கொள்ளலாம். தங்குமிடவசதியுண்டு. சிவபாதம் கிறஸர், அச்சுவேலி. 9090

வியாபார ஸ்தாபனம் ஒன்றிற்கு அனுபவமுள்ள ஒரு கணக்குப்பிள்ளை உடனடியாகத்தேவை. ஆங்கில அறிவு உள்ளவராயும், வரவுசெலவுக் கணக்குகள் எழுதக்கூடியவராயும், Final Accounts செய்யக் கூடியவராயும், வருமானவரி வேலைகளில் அனுபவமுள்ளவராயும் 35-45வயதுக்குள் இருப்பவராயும் இருத்தல் விரும்பத்தக்கது. முன் அனுபவங்களையும் தகைமைகளையும் குறித்து சொந்தக்கையெழுத்தில் 20ந் திகதிக்குமுன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 9146 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 9146

### CLASSES

Piano and Accordian lessons Conducted during Weekend too. [Ladies only] Mrs. Thomas, Church's Main Entrance Road, Sillalai. 8737

## தவறிவிட்டது

கச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் (மெயின் வீதி) பஸ்சாரதி லைசென்ஸ் (இல. 444443) அடையாள அட்டை ஆகியனகொண்ட பொலித்தீன்பை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள், மரியநாயகம் மகேந்திரா, விஜயா ரீறூம், 6, பஸ்நிலையம், யாழ்ப்பாணம்என்றமுகவரியில் கையளித்தால் சன்மானம் வழங்கப்படும். 9173

## வகுப்புகள்

இந்திய தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி பெண்பட்டதாரி யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் நடனவகுப்புகள் ஆரம்பிக்கவுள்ளார். விரும்பியவர்கள் தமது பெயர்-வயது தரம் விலாசம் என்பவற்றுடன் 30-10-83க்கு முன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 9131 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9131

## சோதிடம்

பிரபல சோதிடர் Prof: K· நடராஜா ஜே. பி யை 'லிங்ககிரி' அளவெட்டி (தபாற்கந்தோருக்கு எதிரில்) என்ற முகவரியில் தற்போது தொடர்பு கொள்ளலாம். 9086

## வைத்தியம்

சிறுநீரக ரோகங்கள், ரொன்சில் விஷகடி ஆகியவற்றுக்கு உத்தரவாதமான சிகிச்சை பெற Dr. J. Constantine, சங்கானை றோட், அச்சுவேலி. 8953

## கல்வி

உள், வெளிநாடுகளில் (Electric) வேலைபெற - மின்சாரதொழில் கல்வி - துரித தனிப்போதனை - பேசும் ஆங்கிலத்துடன்- Jaffna Technical School - (1956ல் ஆரம்பமானது) 53 டேவிட் வீதி - குருநகர், யாழ்ப்பாணம். 9141

G. C. E. (O/L) கணிதம், விஞ்ஞானம் தனிப்பட்ட வகுப்புகள் நடாத்தப்படும். வீ. முருகையா 10/1, சிவன் கோவில் வீதி, திருநெல்வேலி. 9135

G. C. E. (O/L), G. C. E. (A/L) கலை, விஞ்ஞானம், வர்த்தகம், Typing, Short hand, G. S. Q. (Bio), B.Sc. (Bio) 17-10-1983 ஆரம்பமாகின்றது வசதிகுறைந்தவர்களுக்குச் சில சலுகைகள் கொடுக்கப்படும். இக்கல்லூரி கல்வித் திணைக்களத்தால் விஞ்ஞான ஆய்வுகூடம் உட்பட அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட பாடசாலையாகும். விபரத்துக்கு:- அதிபர், உயர் கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 9132

### WANTED

Dental Surgeons Dental Technician for Jaffna Practice - Apply Dr. Nithiananthan 167, Power House Road, Jaffna. 9070

### FOR SALE

Mitsubshi Lancer 1400 Station Wagon Top condition One owner 48, Kandy Road, Chundikuli. Phone·22392 9084

### WANTED

A business establishment in Jaffna requires an ideal clerk with English knowledge for EXPORT and IMPORT and connected wharf and customs clearing work. Age immaterial, should be able to handle all connected correspondence in English independently. Apply before 22-10-83 with bio-data and experience to Advertiser No. 9166 C/o Eelanadu, Jaffna. 9166

## சேவை

கலர் பிலிம்ஸ் சுருள்களைச் சிறந்தமுறையில் Processing and Printing செய்துகொள்ள யாழ்ப்பாணம் கொழும்பு ஸ்ருடியோவை நாடுங்கள். 9145

## வாடகைக்கு

வெலிங்டன் அண்மையில் கடை குத்தகைக்கு நிந்தம் கொடுப்பவர் சந்திக்கவும். இரத்தினம், சின்னத்துரை கடை, 209, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 9117

றக்காறோட் காமல் கொன்வென்ற் அருகில் No. 62இல் இருக்கும் கடை வாடகைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும். E. R மரியாம்பிள்ளை, 16, ரெம்பிள்றோட் லேன், யாழ்ப்பாணம். 9091

கே. கே. எஸ். வீதியில் C S K மில்லுக்கு எதிரில் தண்ணீர், வசதியுடன் கூடிய கடை வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். வி. அரியரத்தினம், 'மஞ்சுளம்' 3ம் கட்டையடி, கல்வியங்காடு. 9121

### புங்குடுதீவு - நயினாதீவு பல நோ. கூ. சங்கம்

## வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திரம்

எம்மிடம் 4406 வெற்றுச் சாக்குகள் வரை கேள்விப்பத்திரம் மூலம் விற்பனை செய்ய இருக்கிறது. விண்ணப்பப்பத்திரத்திற்கு ரூபா 5/-ம் வைப்புப் பணமாக ரூபா 250-/ம் செலுத்திக் கேள்விப்பத்திரத் திரங்களை பெற்று 15-10-83ம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னதாக பதிவுத்தபால் மூலம் பொதுமுகாமையாளர், புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புங்குடுதீவு. என விலாசமிடப்பட்டு அனுப்புதல் வேண்டும்.

என்பலப்பில் இடதுபக்க மூலையில் ''கேள்விப்பத்திரம்'' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும். சாக்கு விபரம் பின் வருமாறு:

1. 1 அந்தர் அரிசி சாக்கு 415
2. 67 கிலோ அரிசி சாக்கு 2661
3. 1 அந்தர் சீனி சாக்கு 258
4. 2 அந்தர் சீனி சாக்கு 336
5. 67 கிலோ மா சாக்கு 328
6. 50 கிலோ மா சாக்கு 82
7. பிற சாககு 198
8. போறை பாய்க் 128

8990

## தேவை

ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வைத்தியசாலைக்கு (சின்ன மூளாய்) கீழ்க் காணும் உத்தியோகத்தர்கள் தேவை.

தாதிமார் - இருவர் பெண் கண்காணி -இருவர் தொழிலாளர்-இருவர்.

வேதனம் - அனுபவத்திற்கும், தராதரத்திற்கும் ஏற்ப கலந்து ஆலோசித்து நிர்ணயிக்கப்படலாம்.

விண்ணப்பம் செய்வோர் தங்கள் கல்வித் தகைமை, அனுபவச் சான்றிதழ் பிரதிகளுடன் 25-10-83க்கு முன்னர் பொதுமுகாமையாளர் ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறைக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவும்.

பதில்
பொதுமுகாமையாளர்,
ஊர்காவற்றுறை
ப. நோ. கூ. சங்கம்
ஊர்காவற்றுறை.

9185

# “ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து இஸ்ரேலை நீக்கவேண்டும்”

## லிபிய வெளிநாட்டமைச்சு பேச்சாளர் ஐ.நா.வில் உரை!

நியூயோர்க், அக். 8

“ஐக்கிய நாடுகள் சபையின் விதிமுறைகளை மதிக்காது அமைதிக்குப் பங்கம் விளைவித்துவரும் இஸ்ரேலை ஐ.நா. சபையிலிருந்து நீக்கவேண்டும்” என்று லிபியாவின் வெளிநாட்டமைச்சுப் பேச்சாளர் திரு அப்துலதி அல்-ஒபேடி கூறினார்.

158 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட ஐ. நா. சபையின் 37வது கூட்டத் தொடரில் கலந்துகொண்டு கடந்த வெள்ளிக்கிழமை உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் திரு. அப்துலதி அல்-ஒபேடி கூறியதாவது:

“ஐ. நா.வின் விதிமுறைகளை மதிக்காது, அமைதியையும் விரும்பாது இருந்துவரும் இஸ்ரேலை ஐ. நா.விலிருந்தும் வெளியேற்றவேண்டும். அத்துடன் அந்நாட்டின்மீது இராணுவ, பொருளாதார, அரசியல் ரீதியான தடைகளை உலக நாடுகள் கொண்டுவரவேண்டும்.

லெபனனின் தற்போதைய நிலை பயங்கரமாகவுள்ளது. அங்கு அமெரிக்க, பிரெஞ்சு, மற்றும் அந்நியத் துருப்புகள் இருந்துவருவதால் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது.

லெபனனுக்குப் பல நாட்டுப் படைகளும் அனுப்பப்பட்டதன் முக்கிய நோக்கம், அங்கு அமைதியை ஏற்படுத்தச் செய்வதாகும். ஆனால் அங்குள்ள அமெரிக்க, பிரெஞ்சு, பிரிட்டன் துருப்புகள் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கு மாருக மேலும் பதட்டத்தையே உருவாக்கி வருகின்றன

வியட்நாமில் நடந்துகொண்டதுபோலவே அமெரிக்கா லெபனனிலும் செயல்படப் பார்க்கின்றது. இதனால் அந்நாட்டில் அமெரிக்க ஆக்கிரமிப்புப் படிப்படியாக நடக்கின்றது” என்றார். (கி)

## பாக். பலுச்சிஸ்தான் மாநிலத்திலும் கலவரங்கள்!

இஸ்லாமாபாத், அக் 8

பாகிஸ்தானின்பலுச்சிஸ்தான் மாநிலத்திலும் பாகிஸ்தான் இராணுவ ஆட்சிக் கெதிரான கலவரங்கள் பரவியுள்ளன.

நேற்று பலுச்சிஸ்தான் மாநிலத்தில் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று நடத்தப்பட்டது. அவ்வூர்வலத்தைக் கலைக்கப் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் மூன்று ஆர்ப்பாட்டக்காரர்கள் பலியானர்கள்.

கடந்த எட்டு வாரங்களாகப் பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் இராணுவ ஆட்சிக்கு எதிராகப் பெருமளவில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்த ஆர்ப்பாட்டங்களில் இதுவரை அங்கு முந்நூறுக்குமதிகமானவர்கள் பலியாகியுள்ளனர்.

சிந்து மாகாணத்தைத் தொடர்ந்து கலவரங்கள் பரவியுள்ள முதலாவது மாநிலம் பலுச்சிஸ்தான் என்று தெரிவிக்கப்பட்டது. பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்திலும் கலவரங்கள் ஆரம்பமாகியுள்ளன. (கி)

## போக்லண்ட் முன்னாள் ஆர்ஜன்டீன ஆளுநருக்கு 60நாள் சிறை!

புவனஸ் அயர்ஸ் அக். 8

போக்லண்ட் தீவில் ஆர்ஜன்டீனவின் ஆளுநராகவிருந்த மரியோ பென்ஜமின் என்பவருக்கு ஆர்ஜன்டீன அரசாங்கம் 60 நாள் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

இவர் போக்லண்ட் யுத்தம் பற்றிய நூல் ஒன்றை எழுதி ஆர்ஜன்டீன அரசாங்கத்தின் அனுமதி பெருமல் அந்நூலை வெளியிட்டமைக்காகவே தண்டனைக்குள்ளாகியுள்ளனர்.

கடந்த ஆண்டு ஏப்ரலில் பிரிட்டனின் காலனித்துவ தீவான போக்லண்டை ஆர்ஜன்டீனப் படைகள் கைப்பற்றியதும் மரியோ பென்ஜமின் அத்தீவுக்கான ஆர்ஜன்டீனவின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். இவர் அப்பதவியைப் பிரிட்டிஷ்படைகள் மீண்டும் போக்லண்டைக் கைப்பற்றும்வரை வகித்து இறுதியாக பிரிட்டிஷ்படைகளிடம் தமது நாட்டுப்படைகளுடன் சரணடைந்தார்.

போக்லண்ட் யுத்தத்தில் குதித்த ஆர்ஜன்டீனவைக் கண்டித்தே இவர் தமது அந்நூலை வெளியிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## ஜனதிபதி மார்க்கோஸை எதிர்த்து வேலைநிறுத்தம்!

மணிலா, அக். 8

பிலிப்பைன்ஸின் தலைநகரான மணிலாவில் ஜனதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸை இராஜினமாச் செய்யக் கோரி பல்லாயிரக்கணக்கான அரசாங்க ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கவுள்ளனர்.

இரு மாதங்களுக்கு முன்னர் பிலிப்பைன்ஸ் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அக்கினே சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து பிலிப்பைன்ஸ் ஜனதிபதிக் கெதிராக ஆர்ப்பாட்டங்கள் வெடித்தன. தற்போது இவ் ஆர்ப்பாட்டங்கள் உச்சகட்டத்தை அடைந்துள்ளன.

பிலிப்பைன்ஸின் எதிர்க்கட்சிப் பிரமுகர்களில் ஒருவரும், கொல்லப்பட்ட திரு. அக்கினேவின் இளைய சகோதரருமான திரு. அகபிடோ அக்கினே ஜனதிபதி மார்க்கோஸ் இராஜினமாச் செய்யவேண்டுமென்று கோரிவருகின்றூர்.

பிலிப்பைன்ஸின் கலைஞர்கள், மாணவர்கள், மற்றும் ஊழியர்கள் அனைவரும் திரு. மார்க்கோஸ் இராஜினமாச் செய்யவேண்டுமென வற்புறுத்த வேண்டுமென்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## “கம்ப்யூட்டர்” மாணவர்க்கு உதவுவார்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் ‘கம்ப்யூட்டர்’ பயிற்சியில் ஈடுபட்டிருந்து கலவரங்களின் காரணமாக இடம் பெயர்ந்து வந்துள்ள அகதி மாணவர்கள் தமது மேற்படி நெறியைத் தொடர்வதற்கு உதவ பொறியியலாளர் சுந்தரராஜன் முன்வந்துள்ளார்.

காங்கேசன்துறை லங்கா சீமெந்து லிமிட்டெட்டில் பணியாற்றும் இவரிடம் பயிற்சியை இலவசமாக தொடர விரும்பும் மாணவர்கள் தொடர்பு கொள்ளலாம்.

## பங்களாதேஷில் டிசம்பரில் கிராமசபைத் தேர்தல்கள்!

டாக்கா, அக். 8

பங்களாதேஷில் கிராமசபைத் தேர்தல்கள் எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் இடம்பெறவுள்ளன. பங்களாதேஷ் இராணுவ நிர்வாகி லெப்டினன்ட் ஜெனரல் மொஹமட் எர்ஷாத் இதனை அறிவித்தார்.

பங்களாதேஷில் அரசியல் கட்சிகள் பொதுத் தேர்தலே முதலில் நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன. ஆனல் அதிபர் எர்ஷாத் இக்கோரிக்கையை ஏற்க மறுத்து கிராமசபைத் தேர்தல்களையே முதலில் நடத்தவுள்ளார்.

“ஜனநாயகத்தின் உயிர் நாடியாகக் கிராமங்களே உள்ளதால் கிராமசபைத் தேர்தல்களே முதலில் நடத்தப்படவேண்டும். பொதுத் தேர்தலைக் கிராம ச்பைத் தேர்தல்களுக்கு முன்னர் நடத்துவது பங்களாதேஷ் அரசியல் சாசனத்துக்குப் புறப்பானது” என்று அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

பங்களாதேஷில் கிராமசபைத் தேர்தல்கள் எதிர்வரும் டிசம்பர் 7ம் திகதி நடைபெறும். இதனைத் தொடர்ந்து அடுத்த வருடம் நடுப்பகுதியில் இங்கு பொதுத் தேர்தல் நடைபெறுமென்று தெரிவிக்கப்பட்டது. (கி)

### தென்கொரிய விமானம்

## உளவுவேலையில் ஈடுபடுத்தப்பட்டதா?

புதுடில்லி, அக். 7

“தென் - கொரிய விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது சோகமான விஷயமே ஆனலும் அதைவிடச் சோகமான அபிவிருத்திகளுக்கு அச்சம்பவம் வழிகோலாதிருக்கவேண்டும்” என்று ‘இந்துஸ்தான்டைம்ஸ்’ எழுதுகிறது.

“நுண்ணிய கம்பியூட்டர்களால் வழிகாட்டப்பட்ட சிவில் விமானம் வழிதவறிச் சோவியத் ருஷ்யாவுக்கு ராணுவ கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிக்குப்போய் இருக்கக்கூடாது. சோவியத் விமானங்கள் வழி மறித்தபோது பதிலளிக்காது மௌனமாய் இருந்திருக்கக்கூடாது. சி. ஐ. ஏ. உளவுவேலைக்குப் பிரயாணிகள் நிறைந்த சிவில் விமானமொன்றைப் பாவித்திருக்கக்கூடாது. என்று எழுதும் ‘இந்துஸ்தான் டைம்ஸ்’ 1978-ம் ஆண்டு லிபியா நாட்டுச் சிவில் விமானமொன்றை இஸ்ரேல் சுட்டு வீழ்த்தியது. இதேபோல அதிலும் பிரயாணிகள் இருந்தனர். ஆனல்அன்று ஆட்சேபக்குரல் எழுப்பாதவர்கள் இன்று முட்டிமோதிக் கொண்டு கூக்குரல் போடுவது விந்தையாக உள்ளது.’ என்றும் குறிப்பிட்டுள்ளது.

“லண்டன் டெய்லி டெலிகிராப்” பத்திரிகை; கொரியா விமானம் உளவுவேலைக்கு அமர்த்தப்பட்டதென்று சான்றுகளுடன் எழுதியுள்ளது.

“கொரியா விமானம்பறந்த இடத்தில் அமெரிக்க ஆர். சி. 135 வேவ் விமானம் பறந்துகொண்டிருந்தது உண்மை என்று அமெரிக்கா ஏற்றுக் கொண்டது. இவ் வேவ் விமானம் ஸஹாலின் பிரதேசத்தில் ஏழு முறைகள் பறந்துள்ளது. கொரியா விமானம் சென்ற பாதையில் அவ்விமானத்துக்கு வழிகாட்டும் பொறுப்பு அமெ

(6-ம் பக்கம் பாாக்க)

சிறந்த முறையில், நவீன டிசைன்களில்
“ரெருசோ மாபிள் நிலம்”
அமைக்க நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஸ்தாபனம்
த ரெருசோ கொன்ருக்ரேஸ் & கொன்சல்ரன்ஸ்
THE TERRAZZO CONTRACTORS AND CONSULTANTS
69, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Specialist in Terrazzo Flooring According to CP 240

பவர்ஸ் உரம்
வெல்ல முடியாதது
ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
த. பெ. 11, கொழும்பு - 1, தொலைபேசி: 20551-6
MASTERS ABC 4/82 (D)

# சுற்றமும் உதவியும்

[சுற்றத்தாரோடு அன்போடும் பாசத்தோடும்ஒருவருக்கொருவர் உதவியாக இருந்துகொள்வதின் சிறப்பை அனுபவத்தோடு எழுதுகிறார் கட்டுரையாளர்]

**நா. மாணிக்க இடைக்காடர்**

**நான்** இலங்கை பல்கலைக்கழக மாணவனாக விருக்கும் பொழுது ஒரு லிகிதருடன் சினேகமாக விருந்தேன். அவருக்கு அவ்வளவு பெரிய உத்தியோகமில்லை. தம்பியாரை முன்னுக்கு கொண்டு வரவேண்டுமென்ற ஆசை. ஆனால் அந்தக்காலத்தில் பள்ளிக்கூடத்திற்கு மாதா மாதம் சம்பளம் கட்டவேண்டும். குடும்பத்தை பார்ப்பதுடன் இது கஷ்டமாயிருந்தது தம்பியாரை எப்படியாவது எஸ். எஸ். சி. வரையும் கல்வி கற்க சந்தர்ப்பம்கொடுக்க வேண்டுமென்று நிச்சயித்தார் என்ன நடந்தது? இதற்குத் தேவையான பணத்தை கொடுப்பதற்காக தம்பியார் படிக்கும் வரையும் மத்தியான உணவு அருந்தவில்லை. இந்தப்பணத்தைத் தான் தம்பியாருக்கு யாழ்ப்பாணம் அனுப்பினார்.

இன்னுமொரு உதாரணம் இரு சகோதரர்கள் மலேசியாவில் லிகிதராயிருந்தார்கள். சனி ஞாயிற்றுக்கிழமைகளில் தங்கள் எதிர்காலத்தைப்பற்றி உரையாடுவார்கள். நாம் இருவரும் இப்படியேயிருந்து வருவதால் குடும்பத்திற்கு அவ்வளவு பலனில்லை என்று தமையனார் கூறினார். ஆகையால் தான்லிகிதராய் கடமையாற்றி ஒருபகுதி பணத்தைசெலவிட்டு தம்பியாரை சிங்கப்பூர் வைத்தியசாலையில் படிக்கவைத்தார். ஆறு ஆண்டுகளுக்கு பிறகு தம்பியார் ஒரு வைத்தியராக குடும்பத்தை உயர்த்தினார்கள். தம்பியார் எனது நெருங்கிய நண்பர் எனது வேண்டுகோளுக்கிணங்கி சமீபத்தில் யாழ். பல்கலைக் கழகத்திற்கு ஒரு பெரும் தொகையை நன்கொடையாகக் கொடுத்தார்.

இவைபோல பல உதாரணங்களுண்டு. இதில் நாமறிவது என்னவென்றால் மற்ற சமூகங்களிலும் பார்க்க எங்கள் சமூகம் உடன்பிறந்தாரை என்ன கஷ்டமிருந்தாலும் முன்னுக்கு கொண்டுவர எல்லா உதவிகளும்செய்வார்கள். இது போற்றக்கூடியது. எதிர்காலத்திலும் இதை நாங்கள் பேணவேண்டும். அதோடு இனத்தோடு நின்றுவிடாமல் சமூகத்திற்கு இயன்ற உதவி அளிக்கவேண்டும். மட்டான விவசாய வசதியும் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்புக்கு வசதிக் குறைவுள்ள பகுதியில் சீவிக்கும் மக்களாகிய நாங்கள் இது போன்ற நல்ல பண்பாட்டை உபயோகித்து முன்னுக்குவரவேண்டும்.

கஷ்டங்கள் வரும்பொழுது இனத்தவர்கள் உதவியாலும் மனத்தேற்றலாலும் ஓரளவு சமாளிக்கக்கூடியதாக விருக்கும். சுற்றத்தோர் இருக்கின்றார்கள், எனக்கு ஒரு கிராமமிருக்கின்றது என்பது பேருதவியாயிருக்கும். எனது யுகோசிலாவியா நண்பனொருவர் ரோமாபுரியில் பல ஆண்டுகள் கடமையாற்றியும் இறுதியில் தனது சொந்தநாட்டுக்குபோய் விட்டார். அவர் எப்பொழுதும் சொல்லுவார் ரோமாபுரியில் தன்னை அலுவலகத்திற்கு வெளியே ஒருவருக்கும் தெரியாது. மற்றதொன்று ரோமாபுரியில் தனது அந்தஸ்த்து தான் ஐ. நா.வில் கடமையாற்றும் வரையில்தான். ஆனால் தன் சொந்த நாட்டில் தங்கள் குடும்பத்திற்கு நற்பெயருண்டு தன்னையும் குடும்பத்தினரையும் உத்தியோகம் இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன ஒரேவிதமாக மரியாதை கொடுப்பார்கள் என கூறுவர். இவர் குடும்பத்தினர் ஒருவரே தற்பொழுது யுகோசிலாவியாவின் உபஜனாதிபதி.

பல ஆண்டுகளுக்கு முன் எனக்கு இலங்கை பல்கலைக் கழகத்தில்ஆசிரியராயிருந்தவர் ஒரு சம்பவம் கூறினார். அது என் மனதில் பதிந்திருக்கின்றது. தனது பிள்ளைகள் தன் கிராமம் புலோலிக்கு முதல் முறை போனபொழுது தனது இனத்தவர்களைப் பார்த்து அவர்கள் தங்களுக்கு ஒருபடி குறைந்தவர்கள் என்ற மாதிரிக் கூறினார்கள். உடனே அது பிழையென்றும் எல்லோரும் இனத்தவர்கள் ஆகையால் உயர்வு, தாழ்வு கிடையாதென்றும் வற்புறுத்தினார். இதற்கு பிறகு ஒவ்வொரு ஆண்டு சித்திரை முழு மாசம் புலோலியில் தங்கினார். பிள்ளைகள் திருந்தி இனத்தவர்களுடன் அன்புடனும் மரியாதையுடனும் சீவித்தார்கள் வயதான காலத்தில் மேற்கு நாடுகளில் முக்கியமாக நோர்வே சுவீடினில் வயது முதிந்தவர்களுக்கு தனிமையாய் வசிப்பதால் மனநோய் வருவதுண்டு. அவர்கள் மேலதேசத்து நாகரீக முறையில் இனத்தவர்களைத் தழுவி நடப்பதில்லை. பிள்ளைகள் விவாகமானதும் தனிக்குடித்தனம் நடத்துவார்கள். ஆகையால் பிற்காலத்தில் வயசுபோன கணவனும் மனைவியும் தனிக்குடும்பம் நடத்துவார்கள். அப்பகுதிகளில் சராசரிவயது எழுபதுக்கு கூட. காலம் போகப்போக இவர்களுக்கு உதவி தேவை. ஆனால்கிடையாது. இப்படிப் பட்ட வாழ்க்கையில் கணவன் மனைவியில் ஒருவர் இறந்து விட்டால் மற்றவருக்கு எஞ்சிய காலத்தை எப்படிப் போக்குவதென தெரியாமல் தடுமாறுவார்கள். அரசாங்கம் இப்பொழுது வயது முதிர்ந்தோருக்கு இல்லங்களை தொடக்கி அங்கே இவர்களை வசிக்க செய்கிறார்கள். இந்தமுறையும் அதிகம் திருப்தியாகவில்லை. ஆனால் எங்களுடைய நாடுகளில் இப்பொழுது இது பிரச்னையில்லை. ஆனால் பட்டணங்களில் இடையிடையே இந்த பிரச்னை தலைகாட்டுவதைப் பார்த்திருக்கிறேன். ஆகையால் எங்கள் பழைய முறையாகிய சுற்றத்தைத் தழுவி நடந்தால் வயதுபோனவர்களை அவர்கள் அந்நிய காலத்தில் காக்கும்

இனத்தவர்களைப் பேணி நடப்பதால் மற்றவர்களுடன் அன்புடன் நடக்கக்கூடாது என்ற அர்த்தமல்ல. இனத்தவர்களிடம் சில விடயங்களைக் கூசாமல் பேசலாம் - உரிமையுடன் கேட்கலாம். ஒருவர்க்கொருவர் உதவியாயிருக்கலாம். உயர்வு தாழ்வென்றில்லாமல் வாழலாம். ஒரு நெருக்கடி வரும்பொழுது இனத்தவர்கள் இருக்கிறார்களென்று மனத்திடமிருக்கும். பேணி நடப்பது எங்களிடையே இருக்கும்பண்பு. அதனால் இதை இழக்கக்கூடாது. இனத்தவர்களுடனும் ஊரவர்களுடனும் சேர்ந்து வாழ்வோமாக!

## அன்னையைப்பாடிப் பணிவோமடா

அன்னையைப் பாடிப் பணிவோமடா - தம்பி
ஆனந்த வாரியில் குளிப்போமடா
தென்னன் தமிழாலே இசைபாடி - தம்பி
தேவியைப் போற்றிப் பணிவோமடா
வீரத்தை கல்வியை விழைவோமடா - தம்பி
வெற்றியை செல்வத்தை அளைவோமடா
தீரத்தை ஞானத்தைச் சேர்வோமடா - தம்பி
திண்மையை மானத்தை காப்போமடா
அல்லலை அவதியை அழிப்போமடா - தம்பி
அமைதியை சாந்தியை அளிப்போமடா
தொல்லையை துன்பத்தை தொலைப்போமடா - தம்பி
தூய்மையை வாய்மையை காப்போமடா
சக்திகள் மூவரும் தாய்மாரே - தம்பி
சர்வமும் சக்தியின் மயமாகும்.

— சிங்கை ஆழியான்

## நூல்விமர்சனம்

நூல்: ஊற்று விலை: 4/
வெளியீடு: ஊற்று நிறுவனம், மாரி அம்மன்ஒழுங்கை திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

கடந்த பத்து ஆண்டுகளாக ஈழத்தில் அறிவியல்துறைக்குப் பெரும்பணியாற்றிக் கொண்டிருக்கின்ற பெருமையுடன் ஊற்று வெளிவருகிறது.

சினிமா, அரசியல், காதல் கதைகள் இல்லாமல் ஒரு சஞ்சிகையை நடத்துவது சிரமம் என்ற சிலரின் எண்ணத்துக்குமாறாக விஞ்ஞானம், பொருளியல், சமயம் மற்றும் அறிவியல் சம்பந்தமான கருத்துக்களோடு ''ஊற்று'' இரண்டு மாதத்திற்கொரு தடவை வெளிவந்து கொண்டிருக்கின்றது.

சஞ்சிகை ஒன்றைப் பத்து வருடங்கள் தொடர்ந்து நடத்துவதோடு மாத்திரம் நிற்காமல் அதனுடைய அழகு, பொலிவு என்பனவற்றிலெல்லாம் சிறந்த தரத்தைக் கடைப்பிடிப்பது வரவேற்கத் தக்கதாயுள்ளது

அறிவியலோடு ஆக்கவியலையும் சேர்த்து வழங்கும் ''ஊற்று'' சஞ்சிகையின் சித்திரை-ஆனி இதழின் அட்டைப்படம் இயந்திரமொன்றின் படத்துடன் வெளிவந்திருக்கின்றது. மேலும் இவ்விதழில் ''சனத்தொகையும் வேலையில்லாப் பிரச்னையும்'' என்ற கட்டுரையோடு ஆரம்பித்து பல்வேறுவிடயங்களை உள்ளடக்கியதோடு ஆறுமுக நாவலரின் சமுதாயப்பணிகளில் சிலவற்றையும் கொண்டுள்ளது.

சிறுவர் மாதர்களுக்குப்பயன் படத்தக்க அறிவியலுண்மைகளும் மாணவர்கள் பங்குபற்றத்தக்க போட்டி விடயங்களையும் ஆரம்பிக்கும் கட்டத்தில் மக்களிடையே அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் என்றால் மிகையாகாது.

என். கே. துரைசிங்கம்.


# தமிழர் நிதியம்



நிதிநிறுவனம் பெருமையுடன் அளிக்கும்
அதீத வட்டி வழங்கும்

**36%** நித்யா முதலீட்டு முறித்திட்டம்

அதிக வருமானம் தரும் எமது முதலீட்டு முறித்திட்டத்தில் பங்கு கொண்டு உங்கள் பணத்தை பாதுகாத்து முதலீட்டைப் பெருக்கி, தேர்ந்த அனுபவம் திர்க்கமான வட்டி விகிதம், நம்பிக்கையும், நாணயமும், மிகுந்த சேவையுடன் கூடிய எமது சேவையை நாடுங்கள்!

குறைந்த பட்சம் ரூ. 500/-ம் மற்றும்அதன் பெருக்கத் தொகைகளை 24 மாதம் அன்றில் 12 மாதங்கள் முதலீடு செய்து அதிக வட்டித் தொகையை மாதாமாதமோ வருடமொன்றிற்கோ, அன்றில் முதிர்வடையும் காலத்திலோ உங்கள் விருப்பப்படி பெற்றுக் கொள்ளுங்கள்.

அத்துடன் முதலீட்டாளரின் விருப்பத்திற்கமைய தேவை ஏற்படும் பொழுது முழுத்தொகையையும், மீளப்பெறும் அன்றில் முறிக்கெதிராக மேலதிக கடன் வசதி பெறும் வசதியையும் (கம்பனியின் பிரமாணங்களுக்கு அமைய) அளிக்கின்றோம்.

| காலம் | தொகை | பெறக்கூடிய வட்டி விகிதம் | | | | முதிர்ச்சிக காலம் |
|---|---|---|---|---|---|---|
| | | மாதம் | காலாண்டு | அரை ஆண்டு | வருடம் | |
| 2 வருடம் | 500/- - 99500/- | 27% | 28% | 29% | 30% | 36% |
| 2 வருடம் | 100000/- - 199500/- | 29% | 30% | 31% | 32% | 36% |
| 2 வருடம் | 200000/- அதற்கு மேற்பட்ட தொகையும் | 31% | 32% | 33% | 34% | 36% |
| 1 வருடம் | 500/- - 199500/- | 25% | 26% | 26% | 36% | |
| 1 வருடம் | 200000/- அதற்கு மேற்பட்ட தொகைக்கும் | 29% | 30% | 30% | 36% | |

THAMIL FUNDS AND FINANCE LIMITED
140 நாவலர் வீதி, யாழ்ப்பாணம், ஸ்ரீலங்கா.
NAVALAR ROAD, JAFFNA, SRI LANKA.
REGD NO: PVS 8483
☎ 437

SAVE FOR YOU & FOR YOUR FUTURE

செல்வ, வீர, வித்தியா இலட்சுமி கடாட்சம் பெற நவராத்திரி தினங்களில் பண வைப்பீடு செய்வோர்க்கு 36% அதித வட்டி விசேட சலுகையாக மாதாந்தமும் வழங்கப்படுகிறது.

## அகதிகள் தொடர்ந்து வருவதால் கிளிநொச்சியில் மேலும் ஒரு புதிய முகாம்

[கிளிநொச்சி நிருபர்]

கிளிநொச்சிக்கு மலையகம், கொழும்பு, கல்குடாப் பகுதிகளிலிருந்து 19 குடும்பங்களைச் சேர்ந்த 54 பேர் கடந்த 5ம் திகதி அகதிகளாக வந்துள்ளனர்.

இவர்களின் வருகையைத் தொடர்ந்து கிளிநொச்சி 155ம் கட்டையிலுள்ள புனித அந்தோனியார் ஆலயத்தில் அகதிகள் முகாம் ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. இம் முகாம் பராமரிப்பாளராகக் கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு மிக்கேல் ஞானப்பிரகாசம் இருந்துவருகிறார்.

கிளிநொச்சியில் இதுவரை 12 முகாம்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இறுதியாக ஆரம்பிக்கப்பட்ட புனித அந்தோனியார் ஆலய முகாம் உட்பட நான்கு முகாம்கள் சென். திரேசா தேவாலய நிர்வாகத்தில் உள்ளது.

புனித அந்தோனியார் ஆலயத்தில் அமைந்துள்ள முகாமிற்கு நான் சென்றபோது முகாம் பொறுப்பாளர் திரு. ஞானப்பிரகாசம் கல்குடாத் தொகுதியிலிருந்து அகதியாக வந்துள்ள சசனு எம்புறாஸ் என்ற பெண்மணியை அழைத்துவந்து அறிமுகம் செய்து வைத்தார்.

கல்குடா பழஞ்சேனை என்னும் காட்டுப்பகுதியை அண்மிய கிராமமொன்றி தனது குடும்பம் வசித்துவந்ததாகவும், இக்கிராமத்தை அண்மிய மடவல என்னும் இடத்தில் நூற்றுக்கணக்கான சிங்கள மீனவர்கள் மீன்வாடி அமைத்திருந்தனரெனவும், இச்சிங்கள மீனவர்கள் பழஞ்சேனைக்கு வந்து கற்களால் தமது குடிசைகளுக்கு எறிந்து தம்மை இம்சித்துவந்ததாகவும், பயத்தினால் தாம் அங்கிருந்து வெளியேறி இங்குவந்துள்ளதாகவும், கணவர் எம். செல்வரத்தினமும், 10 வயது மகன் பெனடிக்றும் இங்கு வந்துள்ளதாகவும் சசனு தெரிவித்தார்.

பழஞ்சேனைக் கிராமத்திலிருந்து பலரும் வெளியேறிவிட்டதாகவும், அவர்கள் எங்குசென்றார்களெனத் தமக்குத் தெரியாதெனவும் இப்பெண்மேலும் தெரிவித்தார். [அ]

## தெ. ப. கூ. சங்க புதிய தலைவர்

[யாழ்ப்பாணம்]

வட மாகாண தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தின் புதிய இயக்குநர் சபைத் தலைவராக திரு. தி. அமிர்தநாதன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் யாழ். மாநகர தெ. ப. பொ. சங்கச் செயலாளரும், யாழ். மாநகர ப. நோ. கூ. ச. இயக்குநர்சபை உறுப்பினருமாவார்.

## "பொலிசாரை நோக்கி கைதிகள் சுட்டனர்"

### யாழ். சிறைக்கைதிகள் மரண விசாரணையில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''30 அல்லது 35 சிறைக் கைதிகள் யாழ். சிறைச்சாலைக்குள் ஆயுதங்கள் வைக்கப்பட்டிருந்த அறையை உடைத்து, 5 துப்பாக்கிகள், ஒரு கைத்துப்பாக்கி, 22 தோட்டாக்கள் ஆகியவற்றை எடுத்துக் கொண்டிருந்தபொழுது அங்கு வந்த பொலிசார் அவர்களைக் கைது செய்ய முயன்றனர். அப்பொழுது கைதிகள் பொலிசாரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். பொலிசார் திருப்பிச்சுட்டனர். இதனால் நான்கு விளக்கமறியல் கைதிகள் மரணமானார்கள்; ஏழு கைதிகள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்; அங்கு ஒருவர் மரணமானார்''.

இவ்வாறு யாழ். சிறைச்சாலை பிரதமஜெயிலர் பி. கே. நடராசமூர்த்தி யாழ். நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில்நடைபெற்ற 5சிறைக் கைதிகள் மரணம் தொடர்பான மரண விசாரணையின் போது சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

''கடந்த ஜூலை மாதம் 27ம் திகதி யாழ். சிறைச்சாலையில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களினால் மரணமாகிய ஐந்து விளக்கமறியல் கைதிகளின் மரணவிசாரணை யாழ். நீதிமன்றத்தில் கடந்த வியாழனும், வெள்ளியும் நடைபெற்றது.

டபிள்யூ. ஜேக்கப் பெனடிக்ட், கிறிஸ்ரி, அபூபக்கர், இராமலிங்கம் முருகையா ஆகிய ஐந்து விளக்கமறியல் கைதிகளும்ம துப்பாக்கிச் சூட்டுப் பிரயோகத்தினால் மரணமானவர்களாவர்

சிறைக்கைதிகளில் ஒருவரான நரேந்திரன் லோரன்ஸ் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது.

''சம்பவதினத்துக்கு முதல் நாளான ஜூலை 26ம் திகதி வெலிக்கடைச்சிறையில் குட்டிமணியும், ஏனைய கைதிகளும் கொலைசெய்யப்பட்ட செய்தி அப்பொழுதுதான் யாழ். சிறைச்சாலைக்குள் தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து சிறைக்கைதிகள் மத்தியில் பதட்டநிலை ஏற்பட்டது. சிறிது நேரத்தில் கைதிகள் அங்குமிங்குமாக கிதறி ஓடினர்கள். துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்களும் கேட்டன''.

யாழ். சிறைச்சாலை மேற்பார்வையாளர் கா. மகேந்திரன் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது;

''சம்பவதினம் சிறைச்சாலையின் அறை ஒன்றுக்குள் மறியல் வைக்கப்பட்டிருந்தசிறைக் கைதிகளைப் பரிசோதிப்பதற்காக சிறைச்சாலைக் காவலாளி ஒருவர் அந்தஅறையைதிறந்து கொண்டு சென்றபோது30,40 கைதிகள் அக் காவலரைத் தாக்கிவிட்டு அங்கிருந்துவெளியேறினர்கள். பின்னர் அக் கைதிகள் ஆயுதங்கள் வைக்கப்பட்டிருந்த அறையை உடைத்து துப்பாக்கிகளை எடுத்தார்கள்''.

மற்றொரு சிறைக்கைதியான ஏ. எக்ஸ். செல்வரத்தினம் என்பவரும், ஜெயிலர் க.பரமலிங்கம், சிறைச்சாலை அதிபர் என். சத்தியமூர்த்தி, யாழ். உதவிப் பொலிஸ் அதிபர் ரி. மனோகரன் ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

யாழ் நீதவான் கொலை எனத் தீர்ப்பளித்தார். (மா)

## இன்று சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் கிராமமுன்னேற்ற அபிவிருத்திச்சங்கத்தினர் இணுவில் இராமநாதன் கல்லூரி நவீன விளையாட்டு மைதானத்தைச் சிரமதான மூலம் திருத்தி அமைக்கவுள்ளனர்.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் வலிதெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எ. சி. செபநாயகம் தலைமையில் சிரமதான வேலைகள் ஆரம்பமாகவுள்ளன.

கி. மு. சங்கம், இலங்கை குடும்பத்திட்டச்சங்கம், கலாஜோதி ச. ச. நிலையம், குடும்ப சுகநல மகளிர் மன்றம், தொழில் திணைக்கள தையல் பயிற்சி மாணவிகள்குழு, இந்து விளையாட்டுக்கழகம் ஆகியன இச்சிரமதானப்பணியில் பங்குபற்றவுள்ளன.

இணுவில் சமாதான சபைத் தலைவர் திரு. தி. சி. சண்முகலிங்கம் கி. மு. சங்கத்தலைவர் திரு. செ இலகுநாதன் குடும்ப சுகநல மகளிர் மன்றத்தலைவி திருமதி ஆ நாகலிங்கம், ஆசிரியை செல்வி வி. யூ. நூர்டீன் ஆகியோர் உட்பட பலர் உரைநிகழ்த்துவர். (மா)


அன்ரனி காமன்ஸ் – கரவெட்டி

பெண்பிள்ளைகள்

### தையல் வேலைக்குத் தேவை

யாழ்ப்பாணத்திற்கு மாற்றலாகியுள்ள நீர்கொழும்பில் இயங்கிவந்த பெரிய அளவிலான "றேடிமேட்" தையல் தொழில் நிலையத்திற்கு போதிய அனுபவம் வாய்ந்த பெண் பிள்ளைகள் 50 பேருக்கு மேல் தேவை.

விஞ்ஞான முறையிலான துணி வெட்டுதலில் மிகத் திறமை வாய்ந்த பெண் பிள்ளைகளும் அநேகர் தேவை.

10-10-83 திங்கள் தொடக்கம் 15-10-83 சனிக்கிழமை வரை தினசரி காலை 9-30 மணி தொடக்கம் பி. ப. 4 மணி வரையும் கீழ்க்காணும் முகவரிக்கு சான்றுப்பத்திரங்களுடன் நேரில் வரவும்.

**அன்ரனி காமன்ஸ்**

''ராஜஸ்தான்'',
(தபால் நிலையம் முன்பாக), கொடிகாமம் வீதி,
நெல்லியடி, கரவெட்டி

(9114)



### முக்கிய அறிவித்தல்

கலவரத்தால் இடம்பெயர்ந்த அரசாங்க ஊழியர் பற்றிய விபரங்கள்

1983 ஜூலை, ஆகஸ்ட் கலவரங்களினால் பாதிக்கப்பட்டு, உடைமைகள் இழந்து, இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்தடைந்த அரசாங்க ஊழியர்கள் பின்வரும் விபரங்களை 17-10-1983 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக யாழ். மாவட்ட திட்டமிடல் பகுதி, கச்சேரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

1. ஊழியரின் முழுப் பெயர்:-
2. திணைக்களம்:-
3. பதவி:-
4. தற்போதைய சம்பளம்:-
5. சம்பள அளவுத் திட்டம்:- (Salary Scale)
6. இடம்பெயர்வதற்கு முன் உள்ள வசிப்பிடத்தின் முகவரி:-
7. தற்போதைய வசிப்பிடத்தின் முகவரி:.

தேவநேசன் நேசையா
மாவட்டச் செயலாளரும், யாழ்.அரச அதிபரும்.
9178




### மிட்சுபிஷி 'சக்தி' (MITSUBISHI SHAKTI)

சக்திமிகு இரு சக்கர உழவு யந்திரம்

- 2 டன் சுமை இழுக்கும்
- ஈடு இணையற்ற AD-8 காற்றில் குளிரும் (Air-Cooled) எஞ்சினை கொண்டது
- முன்புறம் 6 வேகங்களிலும் பின்புறம் 2 வேகங்களிலும் இயங்கக்கூடியது
- குறைந்த பராமரிப்புத் தொல்லைகள் உடையது.
- 10 குதிரை திறன் டீசல் இஞ்சின் இணைக்கப்பட்டது.

அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட யந்திரம் விசேஷ விலையில் உங்கள் பார்வைக்கும் விற்பனைக்கும் உள்ளது.




ரூபா 28,500/-
(ரோட்டவேற்றருடன்)

வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள் :

**திருச்செல்வம் அன் கொம்பனி**

510, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன் : 22561

(9161)

# அகதிகளுக்கான உதவிகள்: யாழ். அரச அதிபர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

''சமீபத்திய கலவரங்களினுல் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து வந்தவர்களுக்கு வழங்கப்படும் உதவிகள் சில உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தாமதிக்கப்படுவதாகவும், இன்னும் சில பிரிவுகளில் போலி அகதிகள் இவ்வுதவிகளைப் பெற்றுவருவதாகவும் அல்லது பெற முயற்சிப்பதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது''

இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

''அல்லற்பட்டு வந்துள்ள அகதிகளுக்கு உதவுவது நம் எல்லோருடைய கடமையென்பதுடன் அவர்களுக்காக வரும் மட்டுப்படுத்தப்பட்ட உதவிகளை அகதிகள் அல்லாதோர் அபகரிப்பதைத் தடுப்பதும் நம் கடமையாதல்வேண்டும்.

''அரசிடமிருந்து கிடைக்கும் இவ்வுதவிகளுக்கு இங்கே அனுவசியமாகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன என்று கருதுவதும் தவருனதாகும். யாழ். மாவட்டத்துக்கு இடம் பெயர்ந்தவர்கள் எண்ணிக்கை, அவர்கள் இழந்த சொத்துக்களின் பெறுமதி போன்ற புள்ளிவிபரங்கள் அரசினுல் பேணப்படுவதுடன், இங்கு உதவி வழங்கப்படுவோரின் எண்ணிக்கை, இவ்வெண்ணிக்கையை மீறும் பட்சத்தில் தற்போதைய உதவிகள்கூட நிறுத்தப்படக்கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு. தவிரவும், அகதிகள் அல்லாதோர் இவ்வுதவிகளைப் பெற முயற்சிப்பதால் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் போன்ற தொண்டர் ஸ்தாபனங்கள் வழங்கும் மட்டுப்படுத்தப்பட்ட உடுதுணி போன்ற உதவிகள் உண்மையான அகதிகளுக்குக் கிடைக்காதுபோகின்றது.

''சில உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அளவுக்கதிகமான எண்ணிக்கையினருக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளதால் அவர்களால் அனுமதிக்கப்பட்ட விண்ணப்பங்களை மீள்பரிசீலனை செய்யும்படியும், பொய்த் தகவல்கள் கொடுத்து யாராயினும் உதவிகள் பெற்றிருப்பின் அவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு அத்தகையோரின் விபரங்களை எனக்கு அறிவிக்கும்படியும் இவர்களுக்கு யாராவது உத்தியோகத்தர் உடந்தையாக இருந்திருப்பின் அவர்கள்மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்காக அவர்கள்பற்றியும் அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் சம்பந்தப்பட்ட உதவி அரசாங்க அதிபர்களைப் பணித்துள்ளேன்.

''இது காரணமாக சிலபகுதிகளில் தாமதம் ஏற்பட்டிருப்பினும் உண்மையான அகதிகள் பாதிக்கப்படாதிருப்பதற்காவிரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

''மீள் பரிசீலனையின் போது சில இடங்களில் பொய்யான தகவல்கள் கொடுக்கப்பட்டமையும், ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் சமர்ப்பித்து மோசடிசெய்தமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

''மனிதாபிமானமற்ற இச் செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும் உண்மையான அகதிகளை அடையாளம் காணவும் பொறுப்பு வாய்ந்த தனிநபர்களும், பொது ஸ்தாபனங்களும் முன்வரவேண்டும்.

'எங்கள் எல்லோரது நடவடிக்கைகள் உண்மையான அகதிகளுக்கு உதவுவதாகமட்டும் அமையவேண்டும்.'' (மா)

# ஊர்காவற்றுறை அகதிகட்கு 3ம், 4ம் கட்ட உணவுகள்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை உதவிஅரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட அகதிகளுக்கு 3-ம், 4-ம் கட்ட உணவுப் பொருட்கள் அடுத்த வார முற்பகுதியில் வழங்கப்படவுள்ளன.

இவ் உணவுப்பொருட்களுடன் அகதிகளுக்கு லக்ஸ்பிறே பால் மாவும் சேர்த்து வழங்கப்படவுள்ளதாக ஊர்காவற்றுறை கிராம சேவை அலுவலர் திரு. எஸ். மனோகரன் தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை அகதிகளுக்கு 2ம் கட்ட உணவுப் பொருட்கள் வழங்கப்படவில்லை என்று வெளிவந்த புகார் குறித்து தெரிவித்த கிராமசேவை அலுவலர், அகதிகளல்லாத சிலரும் விண்ணப்பித்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவ்வாறு விண்ணப்பித்தவர்களுக்கு வழங்கப்படாததால் ஏற்பட்ட விளைவாகவே இவ்வாறு தவருன புகார் தெரிவிக்கப்பட்டிருக்கலாம்என்ருர். (கு)

## உளவு வேலைகளில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ரிக்கா, ஜப்பான் நாடுகளின் தலையில் உள்ளது என்று சர்வதேச விமானப் போக்குவரத்து விதிகள் கூறுகின்றன. சோவியத்தரப்பு விடுத்த எச்சரிக்கைகளைக் கொரியா விமானம் சட்டை செய்யவில்லை'' என்று குறிப்பிட்டுள்ளது.

HONDA
மலிவு விற்பனை
புத்தம் புதிய HONDA C 70
மோட்டார் சைக்கிள்கள்
விலை 12,900/- மட்டுமே
இந்த விசேஷ சலுகை கையிருப்பு முடியும்வரை மட்டும்
கன்ரேபியா லிமிட்டட்,
21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24201

எஸ். லோன் வியாபாரிகளுக்கு
ஓர் நற்செய்தி
மகாராஜா நிறுவனத்தின் எஸ். லோன்
வடமாகாண விநியோக நிலையத்தில்
உங்களுக்குத் தேவையான சகல எஸ். லோன்
பைப் வகைகளும், உபகரண வகைகளும்
பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.
மீற். 13/05 முதல் 52/05 வரை
நியூற்ரோன் எலெக்ரிக்கல்ஸ்
141, 143, ஸ்ரான்லிறேட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23016
விற்பனைப்பிரதிநிதி,
158, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

உடுவில் மகளிர் கல்லூரி
அளிக்கும்
Computer Programming & Data Processing
பயிற்சி (செய்முறை உட்பட)
வகுப்புகள்: வார நாட்களில் மட்டும்
காலை 9-00—12-00 மாலை 2-00—4-00 மணி
காலம்: 4 மாதம்.
தகைமைகள்: 1. G. C. E. (O/L) மூன்று திறமைச் சித்தியுடன் ஆங்கிலத்தில் சித்தியும்
2. கல்லூரி நடத்தும் கல்வித்திட்டத் தேர்வில் சித்தி
கல்வித்திட்டத் தேர்வு: 25-10-83 காலை 10-00 மணி
விண்ணப்ப முடிவு திகதி: 20-10-83
விண்ணப்பப்பத்திரம் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
● விரிவுரைகள் பயிற்சிபெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் வழங்கப்படும்
● மேலும் விபரங்கட்கு: 7-10-83 ஈழநாடு இதழைப் பார்க்க

அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்
English Department
பின்வரும் பாடநெறிகள் 15-10-83ல்
மீண்டும் ஆரம்பம்
1. INTEGRATED SPECIAL ENGLISH (ஆறு மாதப் பயிற்சி)
2. TOEFL COURSE (மூன்று மாதப் பயிற்சி)
3. SPOKEN ENGLISH (மூன்று மாதப் பயிற்சி)
4. A. L. ENGLISH LITERATURE (ஒரு வருடப் பயிற்சி)
5. O. L. REVISION ENGLISH (2 மாதப் பயிற்சி)
ஆசிரியர்கள்: திரு. T.N. பஞ்சாட்சரம்
திரு. R.S. நாயகம்
★ இலவச பாடக் குறிப்புகள்
விபரங்களுக்கு:-
ASTAN INSTITUTE
166/1, Hospital Road Jaffna.

# சங்காபிஷேகம்

(மாவிட்டபுரம்)

கொல்லங்கலட்டி சடச்சப்பை வைரவர் ஆலயத்தில் சங்காபிஷேக விழா இன்று 9ம் திகதி இடம் பெறவுள்ளது.

மேற்படி ஆலயம் புதிதாக புனரமைக்கப்பட்டு அண்மையில்கும்பாபிஷேக விழா இடம் பெற்றிருந்தது. கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 45 தினங்கள் திருவிழா இடம்பெற்று 45 ஆவது தினமாகிய இன்று 9ம் திகதி சங்காபிஷேகவிழா இடம்பெறவுள்ளது.

நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர நகைகள் வேண்டுமா?
பொ அம்பலவாணர்
தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் றேட், யாழ்ப்பாணம்.
போன்: 23199 தந்தி: 'வைரம்'

உங்கள் முதலீட்டிற்கு நாடுங்கள் SHABRA UNICO FINANCE LIMITED
நிலையான வைப்பிற்கு அதிஉயர் வட்டி வழங்கும் ஒரே நிறுவனம்.
"SHABRA"
ன்
உழைக்கும் போதே சேமிக்கும் திட்டம்

| மாதாந்தம் | 36 மாத கால முடிவில் |
|---|---|
| 100/- | 4,727.60 |
| 200/- | 9,455.19 |
| 300/- | 14,182.79 |
| 400/- | 18,910.38 |
| 500/- | 23,637.93 |

● புதிய தொழில் ஆரம்பிப்பவர்கட்கு ஆலோசனை வழங்கல்.
● வேண்டிய மூலப்பொருட்கள் இயந்திரங்கள் இறக்குமதி செய்வதற்கு உதவி.
● ரி.வி., குளிர்சாதனப் பெட்டி, மின்விசிறி, துவிச்சக்கரவண்டி, மோட்டார் வாகனங்கள், மின்சாரகேத்தில், அடுப்பு மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்களிற்கும் 60% நிதி உதவி வழங்கப்படும்.
மேலும்:—
யாழ். குடாநாட்டில் எப்பகுதியிலேனும் வீடுகள், காணிகள், தோட்டங்கள் விற்பனைக்கு இருந்தாலோ அன்றி தேவைப்பட்டாலோ உடன் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-
61, நியூ புலர்ஸ் வீதி, கொழும்பு - 4.
தொ. பே. இல: 589310
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே. இல: 22073

**ராணி** (யாழ் நகர்)
10-30, 2-30, 6-15
கமலஹாசன்- அம்பிகா
**சகலகலா வல்லவன்**

**ராஜா** [யாழ். நகர்]
10-30, 2-30, 6-00
பாக்கியராஜ்-அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
**அந்த 7 நாட்கள்**
[கலர்]

**மனோகரா**
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா
தங்கவேலு, நம்பியார்
**நம் நாடு** (கலர்)

**லதா** (கோண்டாவில்)
தினசரி 2-30, 6-30
எம்.ஜி.ஆர். - ஜெயலிதா
**தேடிவந்த**
**மா ப் பி ள் ளை**

**சாந்தி** யாழ்நகர்
10-30, 2-30, 6-30
சிவாஜி - மஞ்சுளா
**உத்தமன்**
(புதிய பிரதி)

**ஹரன்** (யாழ். நகர்)
காலை 10-30, 2-30, 6-30
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ் **துணை**
(கலர்)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
10-30, 2-00, 4-30, 6-45
Bruce Lee in
**ENTER THE DRAGON**
Limited Engagement
For the last time in Jaffna
புரூஸ் லீ நடித்த
என்டர் த ட்ரகன்
சில தினங்கள் மட்டும்
யாழ். நகரில் கடைசி
தடவையாகத் திரையிடப்
படுகிறது.
Next :
IT COULD HAPPEN TO YOU
(A Film on V. D.)

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-15, 6-30.
**விடியும்வரை காத்திரு**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
சிவாஜி - சாவித்திரி
**கர் ண ன்**
(கலர்-புதியபிரதி)

**றீகல்** 6th to 10th
(யாழ். நகர்)
Daily: 10-30 a.m., 2-30
4-45, 7-00 p.m.
Christopher Walken in
**Dogs of War**
WAR FILM—COLOR
இராணுவத்தினரால் சிறைப்பிடிக்கப்பட்டு சித்திரவதைகளுக்குள்ளாகி வெளியேற்றப்படும் அவன் சில நண்பர்களைச் சேர்த்து, நவீன ஆயுதங்களையும் சேகரித்து இராணுவ முகாமையே நிர்மூலமாக்குகிறான்.



# MARINE VACANCIES IN SAUDI ARABIA

CATEGORIES

- TUG MASTER
- TUG ENGINEER
- BOATSWAIN
- A. B.
- OILERS
- COOKS
- LAUNCH OPERATORS
- LAUNCH MECHANIC
- DECK HAND (General)
- DIVERS
- MECHANICAL ENGINEER
- ENGINE MECHANIC
- ELECTRONIC TECHNICIAN
- STOREKEEPERS
- MACHINISTS
- PIPEFITTERS/PLUMBERS
- SHIP FITTERS
- WELDERS
- BLACKSMITH
- CARPENTERS
- AIRCON-MECHANIC
- ELECTRICIAN
- RIGGERS
- CLERKS
- SECRETARY
- LABOURERS

Apply for immediate registration with Bio—data and Photo
CONSTRUCTION AND DEVELOPMENT CO., LTD,
(MANPOWER DIVISION)
37, S. De S. Jayasinghe Mawatta, Nugegoda.
Labour Licence No. 96. Ref. No FE/6/FEA/98/4308
(9169)



வெளிநாடுகளில் வேலை செய்வதற்கேற்ற
## தொழிற்பயிற்சி பெறுவதற்கு
## அரிய சந்தர்ப்பம்

கீழ்க்குறிப்பிட்ட பயிற்சி வகுப்புகள்
15-10-83ல் ஆரம்பமாகின்றன.

1. வெல்டிங் (WELDING)
   அ. ஒரு மாத முழு நேர வகுப்புகள்
   ஆ. 3 மாத வார இறுதி வகுப்புகள்
2. பிளம்பிங் (PLUMBING)
   ஒரு மாத முழு நேர வகுப்புகள்
3. மோட்டார் மெக்கானிசம் (MOTOR MECHANISM)
   ஆறு மாத வாரஇறுதி வகுப்புகள்
4. மின்சார வேலைகள் (ELECTRICAL WORKS)
   அ. வீடு, வர்த்தக நிலையங்களின் மின்சார வயறிங்—ஒரு மாத பகுதி நேர வகுப்புகள்.
   ஆ. மின்சார பொறியியல் துறை டிப்ளோமா. (ELECTRICAL ENGINEERING WORKS DIPLOMA) 6 மாதஇடை நேர வகுப்புகள்
5. கம்பியூட்டர் புறொகிறமிங் (COMPUTER PROGRAMMING)
   (செய்முறை அறிமுறை உட்பட)6 மாத வகுப்புகள்
6. ஆங்கில வகுப்புகள்
   அ. SPOKEN ENGLISH 3 மாத வகுப்புகள்
   ஆ. 6 மாத கால வகுப்புகள்

★ மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிடங்களே உண்டு. இவ்ஸ்தாபனத்தில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பபத்திரத்தில் உடன் விண்ணப்பிக்கவும்.

பயிற்சியைத் திருப்தியாக முடிப்பவர்களுக்கு கூடிய வரை வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெற வசதி செய்து கொடுக்கப்படும்.

பதிவாளர்,
**பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்,**
59, சென். பற்றிக்ஸ் றேட், யாழ்ப்பாணம். (9078)



FROZEN FOODS

Frozen Broiler available at Rs. 40 per kilo. Could be supplied in Jaffna. Contact 15/7, Sangelean Veethy, Nallur, Jaffna. 9186

FOR HIRE

Concrete MIXERS and VIBRATORS available for hire.
V. V. Ramanathan, Kadduvan Road, Myliddy North, Kankesanturai. 9134



## வி ம் ஸ்
## இசைக்கல்லூரி, யாழ்ப்பாணம்.
புதிய வகுப்புகள் ஆரம்பம்:
16-10-83 காலை 10 மணி.

★ வீணை ★ மிருதங்கம்
★ வயலின் ★ பண்ணிசை
★ வாய்ப்பாட்டு ★ ACCORDIAN
★ நடனம் ★ GUITAR

பயிற்றுநர்:-
அநுபவம் வாய்ந்த இந்திய, இலங்கைப் பட்டதாரி ஆசிரியர் (வானொலிக் கலைஞர் உட்பட).
தொடர்பு:-
அதிபர், **வி ம் ஸ்,**
14, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23356. (9188)



கலர் புகைப்படங்களை
குறைந்த செலவில்
குறுகிய காலத்தில்
PROCESSING AND PRINTING
செய்து நயமடைய நாடுங்கள்!
**கொழும்பு ஸ்ரூடியோ**
யாழ்ப்பாணம்.
(9172)



## SALE OF "SEAWORTH"
## With Trawling Items

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான, C-Power எஞ்சின் பொருத்தப்பட்ட, பாவனையில் உள்ள ''SEA WORTH'' மர வள்ளம், விற்பனைக்கு உண்டு, இதற்கான கேள்விப்பத்திரங்கள், பதிவுத்தபால் மூலம் 23-10-83 பிற்பகல் 4 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக, நிறைவேற்று முகாமையாளர், இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

மேற்படி வள்ளத்தை நேரில் பார்க்க விரும்புவோர் காரைநகர் சீ-நோர் இறங்குதுறையில் முன் அறிவித்தலுடன் பார்வையிடலாம்.

9165


### லட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

சுன்னுகம் மயிலணி விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வநாதசுவாமி கோயிலில் லட்சார்ச்சனை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து ஒன்பது தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் மாலை அம்பாளுக்கு விசேட அபிஷேகத்துடன் கிரியைகள் ஆரம்பமாகும். மஹாநவமி தினமான ஒன்பதாம் நாள் அஷ்டோத்தரசத சங்காபிஷேகம் நடைபெற்று லட்சார்ச்சனை பூர்த்தியாகும்.


**வின்ஸர்** (யாழ் ...)
தினசரி 10-30 2-00
4-30 7-00
Sean Connery
Jene Hackman in
**The Bridge Too Far**
(War Film)
From 12-10-83 to 14-10-83
NORTH SEA HIJACK



# A. T. A. INDUCTION COURSE
## EXAM MARCH - 1984

கணக்கியல், வரி. கணக்காய்வு என்பவற்றில் செயல்முறைப் பயிற்சியுடன் கூடிய ஆரம்ப அறிவைப் பெறுவதற்கான மூன்று மாத வார இறுதி வகுப்புக்கள் உயர்தர கணக்கியல் நெறிகளை (I. C M. A. CHARTERED ETC.) கற்க விரும்புபவர்களுக்கும், தொழில் வாய்ப்புப் பெற முனைவோருக்கும் மிக்க பயனுடையது. தகுதிமிக்க விரிவுரையாளர்களால் விரைவில் முதல் பிரிவு வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இலவச வழிகாட்டிக்கு முத்திரையுடன் கூடிய சுய விலாசம் எழுதப்பட்ட நீண்ட கடித உறையுடன் அல்லது நேரில் தொடர்பு கொள்க:

DIRECTOR OF STUDIES
Tax & Accounting Services,
37, Pirapankulam Lane,
JAFFNA.
கிளை அலுவலகம்:
UPSTAIR, 15, MODERN MARKET,
CHAVAKACHCHERI.

9187

அமெரிக்கத் தலையீட்டுக்கு ஆதரவுவழங்கிவரும் இலங்கைக்கு எதிராக

# பொருளாதாரத் தடை

## விதிக்கக் கோருகிறார் நெடுமாறன்!

சென்னை, அக். 8

இந்துசமுத்திரத்தில் அமெரிக்கா தனது செல்வாக்கைப் பயன்படுத்த இடமளித்து வரும் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக இந்திய அரசு பொருளாதாரத் தடைகளை விதிக்கவேண்டும்.

தமிழ்நாடு காந்தி காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. ப. நெடுமாறன் திருச்சியில் நடைபெற்ற கட்சிக்கூட்டத்தில் இந்திய மத்திய அரசிடம் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

அமைதியாக இருக்கும் இந்து சமுத்திரப்பகுதியில் அமெரிக்க தலையீட்டுக்கு வழிவகுத்து அங்கு அமைதியற்ற நிலையை இலங்கை அரசு ஏற்படுத்தி வருகிறது என்றும் திரு. நெடுமாறன் குற்றம் சாட்டினார்.

இலங்கைத் தமிழ் மக்களுக்குப் பூரண பாதுகாப்புக் கிடைப்பதற்கு இந்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் இந்திய வம்சாவளியினருக்கு அந்தமான் நிக்கோபார் தீவுகளிலுள்ளதோட்டங்களில்வேலை வாய்ப்பு அளிக்கவேண்டும்என்றும் திரு. நெடுமாறன் மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்தார்.

---

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையினரின் கூட்டமொன்று இன்று திருநெல்வேலி இந்து இளைஞர் சங்க கட்டிடத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறுகிறது.

யாழ். மாவட்ட சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப்படை பிரமுகர்களான டாக்டர்கள், ஈ. பி. இராசையா, சுகந்தன் இன்னாசித்தம்பி ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துரை வழங்குவார்கள்.

இப்பிரிவின் எதிர்கால நடவடிக்கைகள்பற்றி இன்றைய கூட்டத்தில் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

கி)

---

## மாலையானதும் வவனியா நகர் அடங்கிவிடுகிறது

(வவனியா)

அண்மைக்காலமாக வவனியா நகர் மாலையானதும் ஜன நடமாட்டமின்றி வெறிச்சோடி காணப்படுகின்றது.

தினமும் காலையில் சனக்கூட்டம் நகரில் காணப்படினும் மாலையானதும் நகர் வெறிச் சோடி கிடக்கின்றது.

(அ)

---

## பாகிஸ்தான்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டெஸ்ட் போட்டியின் 3-வது நாள் ஆட்ட முடிவில் பாகிஸ்தான் கோஷ்டி தனது முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 219 ஓட்டங்களைப் பெற்றது.

இந்தியா கோஷ்டி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 245 ஓட்டங்களைப் பெற்றது.

---

## இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட

# தனியார்துறை ஊழியருக்கும் உணவு, உடை!

(யாழ்ப்பாணம்)

இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த தனியார்துறை ஊழியர்களுக்கு ஆயிரம் ரூபா நன்கொடையுடன் உணவுப் பொருட்களையும் உடுபுடவைகளையும் விசேடமாக வழங்குவதற்கு அத்தியாவசிய சேவைகள் நாயகம் திரு. பிரட்மன் வீரக்கோன் இணக்கம் தெரிவித்துள்ளதாக தெரிய வருகிறது.

இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட சகலருக்கும் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் மூலம் அரசும், செஞ்சிலுவைச் சங்கமும் ஏற்கனவே உணவுப் பொருட்களையும் உடுபுடவைகளையும் வழங்கியுள்ள போதிலும் இப்போது தனியார்துறையினருக்கு வேறு சில பொது நிறுவனங்கள் மூலம் உணவுப் பொருட்களும் உடுபுடவைகளும் கிடைக்க இருக்கின்றது.

யாழ். அரசாங்க அதிபர், அகதிகள் புனர்வாழ்வு நிதியம், பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழு ஆகியோர் இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(மா)

---

## தனியார்துறை ஊழியர் பட்டியல் நாளை கையளிப்பு

யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட தனியார் துறை ஊழியர்களின் பெயர்ப் பட்டியல் ஒன்று பாதிக்கப்பட்ட இணைப்புக் குழுவினால் அத்தியாவசிய சேவைகள் நாயகத்திடம் நாளை திங்கட் கிழமை கையளிக்கப்பட இருக்கிறது.

மேற்படி இணைப்புக் குழுவின் செயலாளர் திரு. ஐ. தி. சம்பந்தன் இப்பட்டியலை திரு. பிரட்மன் வீரக்கோனைச் சந்தித்து நேரில் இதனைக் கையளிப்பார்.

இனக்கலவரத்தினால் வேலை இழந்த ஊழியர்களுக்கு மீண்டும் வேலைபெற்றுக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு திரு. சம்பந்தன் கொழும்பில் தொழில் திணைக்கள அதிகாரிகளையும் சந்தித்து பேச்சு நடத்துவார் என இணைப்புக்குழுவைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

(மா)

---

## இந்த இருவரும் இரகசியப் பொலிசில்

(பண்ணுர்)

மடு-பண்டிவிரிச்சான் வீதியில் அடம்பன் உதவிஅரசாங்க அதிபரிடம் 33 ஆயிரம் ரூபா வறட்சி நிவாரணப் பணமும், 33ஆயிரம் ரூபா பெறுமதியான உணவு முத்திரையும் கொள்ளையடிக்கப்பட்டது தொடர்பாகச் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட இருவரும் விசாரணைக்காக இரகசியப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கிராமசேவை அலுவலர் ஒருவரும், விசேட சேவை அலுவலர் ஒருவருமே விசாரணைக்காக இரகசியப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களாவர்.

இவர்களைப் பாதுகாப்புப் படையினர் விசாரணை செய்த பின்பே இரகசியப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

(அ)

---

## காரை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னப் பாய்ந்து இவர்களது காருக்குள் ஏறிக் கொண்டார்கள். அடுத்து இளைஞர்களில் ஒருவர் சாரதி தம்பிப்பிள்ளை முருகேசுவை [65 வயது] துப்பாக்கி முனையில் பயமுறுத்தி கல்வியங்காடு ஊடாகக் காரைச் செலுத்தும்படி உத்தரவிட்டார்.

கார் திருநெல்வேலி, மானிப்பாய், ஆனைக்கோட்டை, நவாலி ஊடாகச் சென்று அராலி செல்லும் மாட்டு ஒழுங்கையில் ஜனசந்தடியற்ற வயல் வெளியில் போய்க் கொண்டிருந்த போது காரை நிறுத்தும்படி உத்தரவிட்ட இளைஞர்கள் தகப்பனிடமிருந்து வைரமோதிரம் உட்பட 4 மோதிரங்களையும் மகனிடமிருந்து இரு மோதிரங்களையும் பறித்தனர்.

பின்பு அவர்கள் இருவரையும் அவ்விடத்தில் விட்டுவிட்டு சாரதியைப் பயமுறுத்திய இளைஞர்கள் காரில் அராலி, வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, பண்டத்தரிப்பு, விளான், தெல்லிப்பளை வழியாகச் சென்று தெல்லிப்பளை ஆஸ்பத்திரிக்கு அண்மையில் உள்ள சுடலையில் இறங்கிச் சென்று விட்டனர்,

இதுபற்றி எவருக்கும் தகவல் கூறினால் கொலை செய்வோம் என இளைஞர்கள் பயமுறுத்திவிட்டு சென்றனராம்.

தகப்பனும், மகனும் யாழ். பொலிஸ் நிலையத்திற்கு வந்து சேர சாரதியும் காருடன் வந்து சேர்ந்தார்.

கொள்ளையடிக்கப்பட்ட நகைகளின் பெறுமதி 14 ஆயிரம் ரூபா என்றும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பொலிஸார் வேண்டுகோள்

இதுகுறித்து விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் பொதுமக்களிடமிருந்து நகைகளை கொள்வனவு செய்யும் நகைக்கடைக்காரர்களும் மற்றவர்களும் தமக்கு அறிமுகமில்லாதவர்களிடம் அவற்றை வாங்க வேண்டாம் என்றும் சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் பொலிசாருடன் தொடர்பு கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(மா)

---

## இலங்கையை....

1ம் பக்கத் தொடர்ச்சி)

வரம் குறித்து உரையாடினார்.

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்குஇந்தியப்பிரதமர்திருமதி இந்திராகாந்தி மேற்கொண்டு வரும் முயற்சிகள் பாராட்டுக்குரியது அதேவேளையில் தமிழ்நாட்டில்உள்ள சில அரசியல் கட்சிகள் கடைப்பிடிக்கும் போக்கு வியப்பை அளிக்கின்றது என்று ஜனுப் ஹமீட் கூறினார்.

தமிழ்நாட்டில்உள்ள இரு அரசியல் கட்சிகள் தமக்குச் செல்வாக்கைத் தேடிக்கொள்ளும் நோக்கத்துடன் இலங்கைத் தமிழர் பிரச்னையைப் பயன்படுத்தி வருவதாகவும் அமைச்சர் ஜனுப் ஹமீத் ஐ. நா. பொதுச்செயலாளரிடம் தெரிவித்திருந்தார்.

இலங்கையில் நிலைமை தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளதாகவும் இலங்கைத் தமிழர் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி எடுத்து வரும் முயற்சிகளுக்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு அளித்து வருவதாகவும் அமைச்சர் ஹமீத் ஐ. நா. செயலாளரிடம் தெரிவித்தார். [வெ]

---

## நிலைமையை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுச்செயலாளர் திரு. பெரஸ்டி கியூலர் இலங்கை வெளிநாட்டமைச்சர் ஜனுப் ஏ. ஸி. எஸ். ஹமீட்டிடம் தெரிவித்தார்.

ஐ. நா. ஸ்தாபனத்தின் உதவிகள் தொடர்ந்தும் இலங்கைக்கும் கிடைக்கும் என்று திரு. கியூலர் இலங்கை வெளிநாட்டமைச்சரிடம் தெரிவித்தார்.

---

## திரும்பிச் செல்லமுடியாத ஊழியருக்குப் புனர்வாழ்வு!

(யாழ்ப்பாணம்)

இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களில் இடமாற்றம், இளைப்பாற்றுத் திட்டம் ஆகியவற்றுக்கு உட்படாமலும் மீண்டும் தென்னிலங்கைக்குத் தொழில் நிமித்தம் செல்ல முடியாமலும் இருப்பவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் திட்டம் ஒன்று அமுல் செய்யப்படவுள்ளது.

கைத்தொழில் நிறுவனங்களை அமைப்பது போன்ற பொருளாதாரத் திட்டத்தைத் தம்மிடம் சமர்ப்பித்தால் அதற்குத் தாம் அரசின் அனுமதியையும் நிதி உதவியையும் பெற்றுத் தருவதென அத்தியாவசிய சேவைகள் நாயகம் தம்மைச் சந்தித்த பாதிக்கப்பட்ட இணைப்புக்குழுவிடம் உறுதியளித்தார்.

இதனையடுத்து அகதிகள் புனர்வாழ்வு நிதியமும் பாதிக்கப்பட்ட இணைப்புக்குழுவும் ஆக்கபூர்வமான பொருளாதாரத் திட்டங்களை அமுலாக்குவதில் ஈடுபட்டுள்ளன.

(மா)

---

## அமெரிக்க....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட வேண்டுமென்றும் அவர்கள்கருதுகின்றனர் என்று அமிர்தலிங்கம் சொன்னார்.

அவர் அப்பேட்டியில்மேலும் தெரிவித்துள்ளதாவது:

''இலங்கைத் தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக இந்திய அரசாங்கம் தெரிவித்திருக்கும் யோசனைகளைத்தவிர, வேறெந்த வழியிலும் தீர்வுகாண முடியாதென்றும் அமெரிக்கப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

''இலங்கைத் தமிழர்களின் பிரச்னைக்குத்தீர்வு காண்பதற்கு தனிநாடுதான் ஒரேவழி என்பது எமது கொள்கையாக இருந்தாலும், இது தொடர்பாக இந்திய அரசு தெரிவிக்கும் மாற்றுத் திட்டத்தை மக்கள் முன்வைத்து அவர்களின் ஆதரவைப் பெற முயலுவோம்'' என்றார்.

திரு. அமிர்தலிங்கம் அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி, கனடா, நோர்வே ஆகிய நாடுகளுக்கான தனது விஜயத்தை முடித்துக்கொண்டு இன்று லண்டன் செல்லவுள்ளார்.

(வெ)

---

## தபால் பார்சல்களை ஏற்கமறுப்பு!

(வவனியா)

அண்மைக்காலமாக வவனியா தபால் நிலையத்தில் பார்சல்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கப்படுகின்றது.

தபால்திணைக்கள உயர்மட்டத்திலிருந்து வந்த உத்தரவின் பேரிலேயே இங்கு பார்சல்கள் ஏற்றுக்கொள்வது தற்காலிகமாக் நிறுத்திவைக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

இதனால் இப்பகுதிப் பொது மக்கள் வெளியூருக்கு அதிமுக்கிய பொருள்களை அனுப்பமுடியாது கஷ்டமடைகின்றனர்.

(அ)

---

## மரண அறிவித்தல்

### பண்டிதர்
### நாகநாதபிள்ளை ஏகாம்பரம்
### (சட்டத்தரணி)

பண்டிதர் நாகநாதபிள்ளை ஏகாம்பரம், சட்டத்தரணி அவர்கள் காலமானார். இவர் மூளாய்வீதி வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவரும், சொர்ணலட்சுமியின் அன்புக்கணவரும், திருமகள் சதானந்தனின் அன்புத் தந்தையும், டாக்டர் க. சதானந்தன் (Dental Surgeon Nigeria) அவர்களின் மாமனாருமாவர். இறுதிக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று ஞாயிறு(9-10-83) காலை 8-30 மணியளவில் நடைபெறும். 'மயிலகம்' மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. 9195

---

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு அக்டோபர் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under Number B 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telegram: Eelanadu, Telephone: 22389—24126.